**சார்வரி ஆண்டு (வைகாசி 23) ஜுன் 05.06..2020 ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு திருவாரூர் நகர்மன்ற அவசர கூட்டம் நடைபெறும் அப்பொழுது கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்**

**முன்னிலை: திருமதி.ஆர்.ஜெகதீஸ்வரி., எம்.இ., ஆணையர் (மு.கூ.பொ) மற்றும் தனி அலுவலர்**

| நாள் | பொருள் எண் மற்றும் கூட்ட பொருள்கள் விபரம் | தீர்மான எண் |
|---|---|---|
| 05.05.2020 | பொருள் எண்.1 | 29<br>அனுமதிக்கப் படுகிறது |

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அலவலகத்திலிருந்து வரப்பெற்ற தொலைபேசி செய்தி நாள்.03.06.2020ன்படி தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (வரச)2020-2020ன் கீழ் தார் சாலை அமைக்கும் பணிகளுக்கு ரூ..150.00 இலட்சத்திற்கு ஒரு சிப்பமாக பணிகள் மேற்கொள்ள தேர்வு செய்யப்பட்டு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதற்கு நிர்வாக அனுமதி பெறவும், மேற்படி பணிக்கான மதிப்பீட்டு தொகையினை நகராட்சியின் நிதி நிலையினை கருத்தில்கொண்டு முழுமானியமாக பெற்று பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

| வ. எண். | வார்டு எண் | பணியின் விபரம் (தார்காலை பணிகள் | நீளம்( கி.மீ) | அகலம் (மீ) | மதிப்பீட்டு தொகை (ரூ லட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| **சிப்பம் -1** | | | | | |
| 1 | 12 | கீழ வடம்போக்கி தெரு | 0.190 | 9.00 | |
| 2 | 29 | பெரியமில்தெரு | 0.300 | 4.00 | |
| 3 | 04 | ஹவுஸிங் யுனிட் | 0.350 | 4.00 | |
| 4 | 04 | சாது சுப்பையா நகர் | 0.135 | 4.00 | |
| 5 | 04 | தென்றல் நகர் | 0.160 | 4.00 | |
| 6 | 11 | வாசன் நகர் | 0.628 | 4.00 | |
| 7 | 27 | திலகர் முதல் தெரு | 0.124 | 4.00 | |
| 8 | 27 | ஐ.பி.கோவில் தெற்கு தெரு | 0.405 | 4.00 | |
| 9 | 15 | வி.எஸ்.டீ தெரு | 0.246 | 4.00 | |
| 10 | 28 | குரு நகர் | 0.374 | 4.00 | **150.00** |
| 11 | 30 | வன்மீகபுறம் | 0.252 | 4.00 | |
| 12 | 03 | ராஜா தெரு | 0.080 | 4.00 | |
| 13 | 05 | கீழ காவாதக்குடி | 0.060 | 4.00 | |
| 14 | 06 | ஈ.வி.எஸ் நகர் | 0.310 | 4.00 | |
| 15 | 06 | கப்பல் நகர் | 0.055 | 4.00 | |
| 16 | 06 | பெரியார்தெரு | 0.101 | 4.00 | |
| 17 | 04 | தென்றல் நகர் மெயின் ரோடு | 0.400 | 4.00 | |
| 18 | 01 | நரசிம்ம தோப்பு (மெய் பொருள் நகர் | 0.100 | 4.00 | |
| | | **மொத்தம்** | **4.270** | | |

அலுவலக குறிப்பு:

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) இந்நகராட்சியின் நிதி நிலைமையினை கருத்தில் கொண்டு முழுமானியமாக பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.1509/2020/இ1

| நாள் | பொருள் எண் மற்றும் கூட்ட பொருள்கள் விபரம் | தீர்மான எண் |
|---|---|---|
| 05.05.2020 | பொருள் எண்:02 | 30<br>அனுமதிக்கப் படுகிறது |

திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 74 குளங்கள் அமைனத்தும் அரசு புறம்போக்கு குளங்களாகும். அவற்றில் நகரின் பிரதான பகுதியில் வார்டு எண்.02 பிளாக் எண்.44, சர்வே எண்.27104ல் அமைந்துள்ள உடையார் குளத்தின் பரப்பளவு 1.21527 ஏக்கராகும் (4091.17 சதுர .மீ) மேற்காணும் குளத்தினை தூர்வாரப்படாமலும் மழைநீர் சேகரிப்பு செய்ய

| | | |
|---|---|---|
| | இயலாமலும் உள்ளது. எனவே மேறக்ணும் குளத்தினை தூர்வாரவும், கரைகளை தடுப்புசுவர் கட்டி பலப்படுத்தவும் மழைநீர் சேகரிப்புக்கான அனைத்து அமைப்புகளும் அமைக்கவும் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளவதற்கு ரூ.50.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.<br>மேலும், மேற்கண்ட பணியினை மேற்கொள்ளும் பட்சத்தில்அப்பகுதியில் மழைநீர் சேகரிப்பு செய்வதுடன் நிலத்தடி நீர்மட்டம் உயரவும் வாய்ப்புள்ளது என்ற விபரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேற்காணும் தேர்வு செய்யப்பட்ட குளத்தினை மேம்படுத்தும் பணிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதற்கு நிர்வாக அனுமதி பெறவும், மேற்படி பணிக்கான மதிப்பிட்டு தொகையினை இந்நகராட்சியின் நிதி நிலையினை கருத்தில் கொண்டு முழுமானியமாக பெற்று பணியினை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. இந்நகராட்சியின் நிதி நிலைமையினை கருத்தில் கொண்டு முழுமானியமாக பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.3106/2019/இ1 | |

இடம் : திருவாரூர்

நாள் : **05/06/2020**

(ஒம்)திருமதி.ஆர்.ஜெகதீஸ்வரி

**ஆணையர்/தனி அலுவலர்,**

**திருவாரூர் நகராட்சி.**

**சார்வரி ஆண்டு ஆணி 12 ஜுன் 29.06.2020 ம் தேதி திங்கள் கிழமை காலை 10.30 மணிக்கு**
**திருவாரூர் நகர்மன்ற சாதாரண கூட்டம் நடைபெறும் அப்பொழுது**
**கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்**
**முன்னிலை: திருமதி.ஆர்.ஜெகதீஸ்வரி., எம்.இ., ஆணையர் (மு.கூ.பொ) மற்றும் தனி அலுவலர்**

<table>
<tr><th>நாள்</th><th>பொருள் எண் மற்றும் கூட்ட பொருள்கள் விபரம்</th><th>தீர்மான எண்</th></tr>
<tr><td>29.06.2020</td><td>பொருள் எண். 01<br>இந்நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர் அவர்களின் மே 2020ம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவவக குறிப்பு<br>மன்றம் பதிவு செய்யலாம்.</td><td>31<br>பதிவு செய்யப்பட்டது</td></tr>
<tr><td>29.06.2020</td><td>பொருள் எண். 02<br>திருவாரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 22, 27 மற்றும் 28 பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தொற்று ஏற்பட்டதனைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர், திருவாரூர் அவர்களின் ஆய்வில் நோய்தொற்று எற்பட்டுள்ள பகுதிகளை தடைசெய்யப்பட்ட பகுதிகளாக (Containment Zone) தனிமைப்படுத்தப்பட்ட வார்டாக மாற்றி அமைக்க அறிவுறுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து மேற்காணும் வார்டுகளில் தொற்று நோய் பரவலை தடுக்கும் நோக்கில் தடுப்புகள் (Barricade) தகரசீட்டினை கொண்டு அமைக்கவும் பொதுமக்கள் அதிகளவில் ஒருஙகிணைக்கும் பகுதிகளான புதிய பேருந்து நிலையம், அம்மா உணவகம் பழைய பேருந்து நிலையம் மற்றும் நகராட்சி அலுவலகத்திலும் சிண்டெக்ஸ் டேஙக் பொருத்தி கைகழுவவும் வசதி செய்திட தயார் செய்யப்பட்டமைக்கான உத்தேச மதிப்பீடு ரூ. 1.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதி வழஙகலாம்.<br>2. மேற்காணும் பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகையினை அரசினால் கொரோணா தடுப்பு நடவடிக்கைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் செலவீனத்தை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.<br>ந.க.எண்.1314/2020/இ1</td><td>32<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>29.06.2020</td><td>பொருள் எண். 03<br>திருவாரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.22,27 மற்றும் 28 பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தொற்றினை தடுக்கும் பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தொற்று நோய் ஏற்பட்டுள்ள பகுதிகளை தடைசெய்யப்பட்ட தனிமை பகுதிகளாக தகர ஷீட்டினை கொண்டு தடுப்புகள் அமைக்கவும், கொதுமக்கள் அதிகளவில் ஒன்று கூடும் பகுதிகளான புதிய பேருந்து நிலையம், அம்மா உணவகம், பழைய பேருந்து நிலையம் மற்றும் நகராட்சி அலுவலகத்திலும் சிண்டெக்ஸ் டேஙக் பொருத்தி கைகழுவும் வசதியினை செய்திடும் பணியினை மேற்கொள்ள 12.05.2020அன்று குறுகிய கால விலைப்புள்ளி கோரப்பட்டதனை தொடர்ந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.
<table>
<tr><th>வ.எண்</th><th>விலைப்புள்ளிதாரர்களின் விபரம்</th><th>மதிப்பீடு</th><th>மதிப்பீட்டு தொகை ரூ.</th><th>மதிப்பீட்டு விலை விகிதம்</th></tr>
<tr><td>01</td><td>ஸ்ரீ இன்பரா ஸ்ட்ரக்ட்சர்ஸ் நெ..7 இராஜாஜி நகர், வ.உ.சி சாலை, மன்னார்க்குடி</td><td rowspan="3">1.75</td><td>152212.73</td><td>மதிப்பீட்டை விட 1.16% அதிகம்</td></tr>
<tr><td>02</td><td>திரு. என். சரவணன், 10 ஏ. ஆண்டியப்பா தெரு, கும்பகோணம்</td><td>151446.73</td><td>மதிப்பீட்டை விட 0.65 % அதிகம்</td></tr>
<tr><td>03</td><td>பி. கே. எம் பில்டர்ஸ் நெ.14 மடப்புரம் பேட்டை கமலாலயம் தென் மேற்கு பகுதி திருவாரூர்.</td><td>150373.74</td><td>மதிப்பீட்டை விட 0.06% அதிகம்</td></tr>
</table>
மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள “மெர்சஸ் பிகேஎம் பில்டர்ஸ், திருவாரூர் என்பவரின் விலைப்புள்ளியில் 0.06 சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவாக வழஙகப்பட்ட விலைப்புள்ளியினை எற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதி வழஙகலாம்.<br>2. மேற்காணும் பணிக்கு மதிப்பீட்டை விட குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள “ மெர்சஸ் பிகேஎம் பில்டர்ஸ் திருவாரூர்” என்பவரின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்கலாம்.<br>3. மேற்காணும் பணியின் அவசர அவசியத்தினை முன்னிட்டு போர்கால அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு வேலை உத்தரவு வழஙகப்பட்டதனையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1314/2020/இ1</td><td>33<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>29.06.2020</td><td>பொருள் எண்.04<br>திருவாரூர் நகராட்சிக்கு சொந்தமான ஆணையர் ஜீப் வாகனம் எண். டிஎன் 60 எப் 6520னை பழுதுநீக்கம் செய்வதற்கு 29.05.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனஙகளிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.
<table>
<tr><th>வ.எண்.</th><th>அரசு அஙகீகாரம் பெற்ற நிறுவனஙகளின் விபரம்</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>01</td><td>அன்னை சத்யா இஞ்சினியரிங ஒர்க்ஸ் 13. ராமகே ரோடு, செஙகம் தியேட்டர் அருகில், திருவாரூர்.</td><td>61006/–</td></tr>
<tr><td>02</td><td>சிவசக்தி ஆட்டோ ஒர்க்ஸ், தனலெட்சுமி நகர், அஞ்சுதலை வாய்கால், மயிலாடுதுறை மெயின் ரோடு. கும்பகோணம்.</td><td>62068/–</td></tr>
<tr><td>03</td><td>குரு ஆட்டோ ஒர்க்ஸ், ராஜீவ் நகர், நெ.1 நாகை ரோடு தஞ்சாவூர்</td><td>63130/–</td></tr>
</table>
மேற்கண்ட அரசு அஙகிகாரம் பெற்ற விறுவனஙகளிடமிருந்து வரப்பெற்ற நிலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள “அன்னை சத்யா இஞ்சினியரிங ஒர்க்ஸ், திருவாரூர்” நிறுவனத்தின் மூலம் குறைந்த</td><td>34<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு.<br>1. மன்றம் அனுமதி வழஙகலாம்.<br>2. தற்போது கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை பணிகள் மற்றும் அத்தியாவசிய ப்ணிகளை கருத்தில் கொண்டு வாகனத்தினை பழுது நீக்கம் செய்ய சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழுஙகப்பட்டதற்கும் மன்றம் அனுமதி வழஙகலாம்.<br>3. மேற்கண்ட அரசு அஙகீகாரம் பெற்ற நிறுவனஙகளிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை அளித்துள்ளதனை மன்றம் அஙகீகரிக்கலாம்.<br>ந.க.எண்.1484/2020/இ1</td><td></td></tr>
<tr><td>29.06.2020</td><td>பொருள் எண்.05<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 16 முதல் 30 வரையிலுள்ள பகுதிகளில் கழிவறைகளை நேராய்வு செய்து செய்யப்பட்டுள்ளதில் 12 கழிவறைகளை சீரமைக்க வேண்டியுள்ளது. இவற்றில் கீழ்கண்ட வார்டுகளில் உள்ள பொது கழிப்பிடஙகள் மிகவும் முக்கியமனதாக உள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.<br>
<table>
<tr><th>வ.எண்</th><th>வார்டு எண்.</th><th>பணியின் விபரம்</th><th>மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)</th></tr>
<tr><td>01</td><td>20</td><td>பேபி டாக்கீஸ் சாலையில் உள்ள கழிவறை பராமரிப்பு செய்யும் பணி</td><td>3.40</td></tr>
<tr><td>02</td><td>25</td><td>மஜித் தோப்பு உள்ள பொது கழிவறையினை பராமரிப்பு செய்யும் பணி</td><td>3.80</td></tr>
</table>
மேற்காணும் பொது கழிப்பிடஙகளை பராமரிப்பு செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :<br>1. மன்றம் அனுமதி வழஙகலாம்.<br>2. மேற்காணும் பணிக்குண்டான உத்தேச தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 1351/2020/இ1</td><td>35<br>அனுமதிக்கப்படுகிறது</td></tr>
<tr><td>29.06.2020</td><td>பொருள் எண்.06<br>இந்நகராட்சியின் 2019–2020ம் ஆடுக்கான பொதுநிதி, குடிநீர் நிதி மற்றம் கல்வி நிதி கணக்குகளை தனியார் பட்டய கணக்கர் கொண்டு முடித்திடவும், அதற்கான செலவினம் ரூ.1.00 லட்சத்திற்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>அலுவலக குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>36<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>29.06.2020</td><td>பொருள் எண்.07<br>திருவாரூர் நகராட்சி வார்டு எண்.2 பிளாக் 13, நகளவு எண்.50 (பழைய நகரளவு எண்.726/7)ல் கட்டப்பட்டுள்ள 0.6272.5 ஹெக்டேர் மற்றும் நகளவு எண்.55 (பழைய நகரளவு எண்.724/2)ல் 0.3561.5 ஹெக்டேர் ஆக கூடுதல் 0.9834.0 ஹெக்டேர் பரப்பளவில் உத்தேசித்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் கடிதம் எண்.3216/2019 தம2 நாள் 18.06.2020ன்படி தொழில் நுட்ப அனுமதியும் மனைபிரிவு வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ.து.இ(கு.ம) எண்.30/2020 எண ஒப்புதலும் வழஙகப்பட்டுள்ளது. எனவே நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர், உத்தரவில் கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்படுத்தி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழஙகலாம்.<br>அலுவலக குறிப்பு..<br>மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.</td><td>37<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>29.06.2020</td><td>பொருள் எண்.08<br>திருவாரூர் நகராட்சி அலுவலக வளாகத்திற்கு அலுவலக தளவாடப்பொருட்கள் தேவைப்படுவதால் அதனை ‘T 860. திருவாரூர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை லிமிடெட்’ அவர்களிடம் உரிய விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், அதற்கு உண்டான உத்தேச செலவினம் ரூ. 1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதி வழஙகலாம்.<br>2. மேற்காணும் பொருட்களை T 860. திருவாரூர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை லிமிடெட் அவர்களின் மூலமாக விநியோகம் செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.<br>3. மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.<br>ந.க.எண்.1762/2020/இ1</td><td>38<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>29.06.2020</td><td>பொருள் எண்.09<br>திருவாரூர் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடஙகளில் உள்ள மின் விளக்குகள் பழுதடைந்து உள்ளதனால் பாதுகாப்பு நலனை கருத்தில் கொண்டு புதியதாக மின்சாதன உபகரணஙகள் தேவைப்படுவதால் அதனை T 860. திருவாரூர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை லிமிடெட் அவர்களிடம் உரிய விலைப்புள்ளியினை பெற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் அதன்குண்டான உத்தேச செலவினம் ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு.<br>1. மன்றம் அனுமதி வழஙகலாம்.<br>2. மேற்காணும் பொருட்களை T 860. திருவாரூர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை லிமிடெட் அவர்களின் மூலமாக விலைப்புள்ளி பெற்று விநியோகம் செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.<br>3. மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.<br>ந.க.எண்.1739/2020/இ1</td><td>39<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>29.06.2020</td><td>பொருள் எண்.10<br>இந்நகராட்சியின் பராமரிப்பிலுள்ள கணினி சாதனஙகளுக்கு தேவையான உபகரணஙகள் வாஙகி கொள்ளவும், பயன்பாட்டிலுள்ள கணினி மற்றும் பிரிண்டர் சாதனஙகளை வருடாந்திர பராமரிப்பு செய்திடவும், தகவல் தொழில் நுட்ப பணிக்கு பெறப்பட்டுள்ள இன்டெர்நெட் மற்றும் LAN Connectivity முதலிய இணைப்புகளுக்கு வருடாந்திர</td><td>40<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | கட்டணம் செலுத்துவதற்குண்டான செலவினங்களை 2020–2021ம் ஆண்டிற்கு கீழ்கண்ட தலைப்புகள் வாரியாக மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | |

| வ.எண் | தலைப்பு வாரியான விபரம் | ஒதுக்கீடு செய்யப்படும் தொகை |
|---|---|---|
| 01 | தற்போது பயன்பாட்டிலுள்ள கணினி மற்றும் ஜெராக்ஸ் சாதனங்களுக்குண்டான உபகரணங்கள் வாங்குதல் | ரூ.2,50,000/– |
| 02 | தற்போது பயன்பாட்டிலுள்ள கணினி மற்றும் பிரிண்டர் சாதனங்களை ஆண்டு பராமரிப்பு செய்தல் (AMC)மற்றும் இதர பணிகள் | ரூ.2,00,000/– |
| 03 | தகவல் தொழில்நுட்பத்தினை மேம்படுத்த இணையதளம் மற்றும் LAN Connectivity க்கான கட்டணங்கள் செலுத்துதல் | ரூ.3,00,000/– |
| 04 | கூடுதலாக கணினி மற்றும் பிரிண்டர்கள் புதியதாக வாங்குதல் மற்றும் இதர பொருட்கள் வாங்குதல் | ரூ. 2,50,000/– |
| | **மொத்தம்** | ரூ. 10,00,000/– |

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதி வழஙகலாம்.
2. 2020–21ம் ஆண்டிற்கு தேவையான கணினி உபகரணஙகள் வாஙகுதல் மற்றும் பராமரிப்பு பணிகளை ஒப்பந்தப்பணி அடிப்படையில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழஙகலாம்.
3. மேற்காணும் பணிகளுக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழஙகலாம்.
4. மேலும் மேற்காணும் கணினி செயல்பாட்டிற்கு திட்டப்பணிகளில் நிதி ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் திட்ட நிதியில் ஈடுசெய்துக் கொள்ளவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

ந.க.எண்.1746/2020/இ1

இடம் : திருவாரூர்

நாள் : 29 .06.2020

**(ஒம் )திருமதி.ஆர்.ஜெகதீஸ்வரி**

**ஆணையர் / தனி அலுவலர்,**

**திருவாரூர் நகராட்சி.**